Department of
Education

GOVERNMENT OF
WESTERN AUSTRALIA

# மாற்றுத்திறன் இளையோருக்கான வாழ்க்கைத்தொழில் வழிவகைகள் பற்றிய தகவல்கள்

## பெற்றோர் பராமரிப்பாளர்களுக்கான தகவல்கள்

---

இளையோர் அனைவரும் உயர்கல்விக்கு வெற்றிகரமாகச் செல்வதற்கு, மேற்கொண்டு பயிற்சிக்கு மற்றும்/அல்லது அர்த்தப்பூர்வமான வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு, தங்கள் விழைவுகளை உருவாக்கவும் சவாலான கற்றலை மேற்கொள்ளவும் வழிப்பாதைத் திட்டங்களை உருவாக்கவும் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

ஆஸ்திரேலியர்களில் 6-ல் ஒருவர் மாற்றுத்திறனுடையவருடன் வசிக்கிறார். அனைத்துப் பணியாளர்களையும்போல, மாற்றுத்திறனுடையோர் பல்வகைத் திறமைகளை, திறன்களை, தகுதிகளை பணியிடத்துக்குக் கொண்டுவருவதுடன் பல்வேறு பணிகளையும் மேற்கொள்கின்றனர். (மூலம்: வேலை அணுகல்)

ஒரு வேலையில் இருக்கும்போது அது உங்கள் சமூகத் தொடர்புகளை விரிவடையச் செய்கிறது; வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது; நிதிச் சார்பின்மையையும் சுயமதிப்பையும் அதிகரிக்கிறது.

பல்கலைக்கழகங்கள், TAFE மற்றும் பிற பயிற்சி வழங்குநர்கள் அணுகலையும் உள்ளடக்கலையும் உறுதிப்படுத்துவதற்கு ஆதரவுதவிகள், தனிப்பட்ட தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்டவை ஆகியவற்றுடன் சான்றிதழ்களை வழங்குகின்றன.

CC BY
Exclusions may apply

| மூலவளங்கள் | |
|---|---|
| **Myfuture** | வாழ்க்கைத்தொழில் வழிவகைகள் மற்றும் வாய்ப்புகள் அனைத்தையும் அறிந்துகொள்வதற்கான வளங்களை myfuture வழங்குகிறது. வாழ்க்கைத் தொழில் திட்டமிடல் மற்றும் முடிவெடுத்தலில் உதவக்கூடிய சுய அறிவை வளர்ப்பதற்கான கருவிகளும் இதில் அடங்கும்.<br><br>பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான தகவல்கள் https://myfuture.edu.au/assist-your-child |
| **உங்கள் வாழ்க்கைத்தொழில்** | தொழில்துறை மற்றும் பணி தொடர்பான தகவல்கள் உள்ளிட்ட வாழ்க்கைத்தொழில் குறித்த தகவல்களின் இல்லம் https://www.yourcareer.gov.au/<br><br>மாற்றுத்திறனுடன் பள்ளியிலிருந்து விலகுவோருக்கான ஆதரவுதவி https://content.yourcareer.gov.au/sites/default/files/2022-12/Support-for-school-leavers-with-disability.pdf |
| **myWAY பணித்தகுதி நிலை** | myWAY பணித்தகுதி நிலையானது ஆட்டிசமுள்ள இளையோர் தங்கள் எதிர்காலத்தைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரவும் பணிவாழ்க்கைக்குத் தயாராகவும் உதவுகிறது. https://www.mywayemployability.com.au/ |

D23/0567739
பிப்ரவரி 2023

Exclusions may apply

| மூலவளங்கள் | |
|---|---|
| **மாற்றுத்திறன் நுழைவாயில் (Disability Gateway)** | ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் மாற்றுத்திறன் நுழைவாயில் என்பது மாற்றுத்திறனாளிகளுக்கு, அவர்களது குடும்பத்தினர் மற்றும் பராமரிப்பாளர்கள் நம்பகமான தகவல்களைக் கண்டறியவும் தங்கள் பகுதியிலுள்ள சேவைகளோடு இணைந்துகொள்ளவும் உதவுவதற்கென உள்ள ஒரு சேவையாகும். இதில்:<br>• இணையதளம், பிரத்யேக 1800 தொலைபேசி எண் மற்றும் சமூக ஊடகச் சேனல்கள் ஆகியவை அடங்கும்<br>• தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் திட்டப் (NDIS) பங்கேற்பாளராக ஒருவர் இருந்தாலும் இல்லாவிடினும் மாற்றுத்திறனுள்ள அனைத்து ஆஸ்திரேலியர்களும் அடங்குவர்<br>• கல்வி, வேலைவாய்ப்பு, வருவாய் மற்றும் நிதி, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு, அன்றாட வாழ்க்கை, உரிமைகள் மற்றும் சட்டம் போன்ற பல்வகைத் தலைப்புகளைச் சுற்றி கட்டமைக்கப்பட்டது.<br>https://www.disabilitygateway.gov.au/ |
| **ஊனமுற்றோருக்கான வேலைவாய்ப்புச் சேவைகள் (DES)**<br><br>**வேலை அணுகல்**<br><br>**DES வழங்குநர்கள்** | DES என்பது ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் வேலைவாய்ப்புச் சேவை. இது மாற்றுத்திறனாளிகள் வேலையைப் பெறவும் தக்கவைக்கவும் வேலைவாய்ப்பு உதவி மற்றும் ஆதரவுகளை வழங்குகிறது.<br><br>வேலை அணுகல் என்பது மாற்றுத்திறனாளிகளுக்கான பணியிடம் மற்றும் வேலைவாய்ப்புத் தகவல்களுக்கான தேசிய மையமாகும். 'மாற்றுத்திறனாளிகள் வேலைவாய்ப்பை ஊக்குவிக்கக்கூடிய தகவல்களையும் வளங்களையும் தருகிறது.<br>https://www.jobaccess.gov.au/<br><br>ஒரு வழங்குநரைக் கண்டறிக:<br>https://www.jobaccess.gov.au/find-a-provider |
| **தேசிய ஊனமுற்றோர் காப்பீட்டுத் திட்டம் (NDIS)** | மாற்றுத்திறனாளிகளிடத்திலும் தாமதமான வளர்ச்சியுள்ள குழந்தைகளிடத்திலும் வாழ்க்கையில் அவர்கள் பின்னர் உருவாகும் விதத்தை மேம்படுத்துவதற்காக முதலீடு செய்து NDIS வாழ்நாள் அணுகுமுறையை கைக்கொள்கிறது.<br>https://www.ndis.gov.au/ |

CC BY
Exclusions may apply

| | |
|---|---|
| **NDIS பள்ளியை விட்டுச் செல்வோருக்கான வேலைவாய்ப்பு ஆதரவுதவிகள் (SLES)** | ஒரு NDIS திட்டத்தில் SLES-ஐச் சேர்ப்பது பள்ளியிலிருந்து வேலைக்கு நகரக்கூடிய பங்கேற்பாளர்களுக்கு உதவுகிறது. இது பள்ளி இறுதியாண்டுகளில் உள்ளோருக்கும் பள்ளியிலிருந்து சென்றபின் நேரடியாகவும் கிடைக்கும்.<br><br>பள்ளியை விட்டுச் செல்வோருக்கான வேலைவாய்ப்பு உதவிகளை வழங்குவோர், இளையோரை வேலைக்குத் தயார் செய்வதிலும், தேடுவதிலும் பெறுவதிலும் உதவுகின்றனர். அவர்கள் அர்த்தப்பூர்வமான தனிநபருக்கேற்ற செய்திறனைக் கட்டமைக்கும் செயல்பாடுகளை வழங்குவதால் இளையோர் தங்கள் வேலைவாய்ப்பு இலக்குகளை எட்ட முடிகிறது. [https://www.ndis.gov.au/providers/working-provider/school-leaver-employment-supports](https://www.ndis.gov.au/providers/working-provider/school-leaver-employment-supports) |
| **NDIS வேலைகளைக் கண்டறிதல், தக்கவைத்தல் மற்றும் மாறுதல்** | பின்வரும் தகவல்களில் அடங்கியவை:<br>• வேலைகுறித்து சிந்தித்தல் மற்றும் பேசுதல்<br>• பள்ளியை விட்டுச் செல்லுதல்<br>• வேலையைத் தயார்செய்தல்<br>• தன்னார்வத் தொண்டு.<br>[https://www.ndis.gov.au/participants/finding-keeping-and-changing-jobs](https://www.ndis.gov.au/participants/finding-keeping-and-changing-jobs) |



CC BY
Exclusions may apply